www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Ts10T

தென்காசி மாவட்டம்

இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2024

26.11.2024

வகுப்பு 10

தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

**அ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடை எழுதுக. 8×1=8**

1) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்'- மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

2) வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

3) 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

4) மேன்மை தரும் அறம் என்பது?

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

5) பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) வெட்சி 1) போருக்குச் செல்லல்

ஆ) வஞ்சி 2) வெற்றியில் மகிழ்தல்

இ) உழிஞை 3) ஆநிரை கவர்தல்

ஈ) வாகை 4) கோட்டையைச் சுற்றி வளைத்தல்

அ) 2, 3, 4, 1 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

6) ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிவது ............

அ) கலிப்பா ஆ) வஞ்சிப்பா இ) வெண்பா ஈ) அகவற்பா

**பாடலைப் படித்து விடை தருக**

'கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் யானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!

7) இப்பாடலின் ஆசிரியர்

அ) உமா மகேஸ்வரி ஆ) தி.சொ.வேணுகோபாலன்

இ) கண்ணதாசன் ஈ) நாகூர் ரூமி

8) இப்பாடலில் இடம்பெற்றுள்ள சீர் மோனையை எடுத்து எழுதுக.

அ) கவிஞன் - கருப்படு ஆ) கருப்படு - உருப்பட

இ) புவியில் - பொன்னினும் ஈ) புவியில் - புகழுடை

**ஆ. எவையேனும் ஆறனுக்கு விடை தருக 6×2=12**

9) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

10) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

11) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

12) காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

13) குறிப்பு வரைக. அவையம்

14) கோட்டையை முற்றுகையிடுதல் பற்றிய திணைகளை விளக்குக.

15) கலைச்சொல் தருக. அ) Consulate ஆ) Philosopher

16) மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இ. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. (17 கட்டாய வினா)** **4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக.**
'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

**(அல்லது)**

'மாற்றம் எனது' எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடல்

18) 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

19) வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க

20) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

21) அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

22) கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு எழுதுக
உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

**ஈ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **2×5=10**

23) அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

24) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக**



தேவகுமார். மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம் - 627809
தென்காசி மாவட்டம்.

**உ. விரிவான விடையளிக்க** **1×8=8**

25) அ) நாட்டுவிழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

\- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com